# தாவீதின் ஊரிலே. . .

**முன்னுரை**

இவ்வாண்டின் கிறிஸ்து பிறப்புப் பெருவிழா மற்ற ஆண்டுகளின் கிறிஸ்மஸ் பெருவிழாவினின்று சிறப்பு வாய்ந்தது, தனித்துவமானது. ஏனெனில் இந்த விழா திருத்தந்தை பிரான்சிஸ் அறிவித்துள்ள இறை இரக்கத்தின் யூபிலி ஆண்டில் வரும் கிறிஸ்மஸ் பெருவிழா வாகும். எனவே 'இறை இரக்கத்தின் நற்செய்தி' எனப்படும் லூக்கா நற் செய்தியில் கூறப்பட்டுள்ள இயேசு பிறப்பு நிகழ்வினை அடிப்படையாகக் கொண்டு இந்த உன்னதமான மீட்பின் வரலாற்று நிகழ்வு சொல்லும் உயரிய இறையியல் உண்மைகளை அறிய முயல்வதே இக்கட்டுரையின் நோக்கம். இந்த ஆய்விற்கு லூக்கா நற்செய்தியின் இரண்டாம் அதிகாரத்தின் முதல் 20 வசனங்களை எடுத்து விளக்க முற்படுவோம்.

**அமைப்பும் மையப்பகுதியும்**

லூக் 2:1–20 எனும் இப்பகுதியை பின்னணியும் பிறப்பும், பிறப்பைப் பற்றிய அறிவிப்பு, அறிவிப்புக்கு பதில் மொழி என மூன்று பகுதிகளாக பின்வருமாறு பிரிக்கலாம்.

### I. பின்னணியும் பிறப்பும் (வச 1–7)

அ. மக்கள் தொகை கணக்கெடுப்பு யோசேப்பையும், மரியாவையும் பெத்லகேம் கொணர்கின்றது (வச 1 –5).

ஆ. இயேசுவின் பிறப்பும், துணிகளில் பொதிந்து, தீவனத் தொட்டியில் கிடத்துதலும் (வச. 6 –7).

### II. பிறப்பைப் பற்றிய அறிவிப்பு (வச. 8–14)

அ. இடையருக்கு வானவரின் அறிவிப்பு (வச. 8 –12)

ஆ. வானவரின் பாடல் (13 –14).

### III. அறிவிப்புக்கு பதில் மொழி (வச 15–20)

அ. இடையரின் பதிலிருப்பு (வச. 15 –17)

ஆ. கேட்டவர், மரியா, இடையர் ஆகியோரின் பதிலிருப்பு (18 –20)

இந்த விவிலியப் பகுதி இயேசுவின் பிறப்பைப் பற்றிக் கூறினாலும், இதன் மையம் வானதூதர் இந்த பிறப்பின் உட்பொருளை இடையருக்கு விளக்கிக் கூறியதிலும் அதற்கு அவர்கள் தந்த பதில் மொழியிலுமே அடங்கியுள்ளது.

இனி, மேலே கூறப்பட்ட பிரிவுகளின் அடிப்படையில் இயேசுவின் பிறப்பு தரும் சில இறையியல் உண்மைகளைக் காண்போம்.

**I. பின்னணியும் பிறப்பும் (வச. 1-7)**

**1. மக்கள் தொகை கணக்கெடுப்பு**

இந்த வரலாற்று நிகழ்வின் பின்னணியில் இயேசுவின் பிறப்பு விளக்கப்படுகின்றது. இந்த கணக் கெடுப்பை வரலாற்று நிகழ்வாக துல்லியமாக வரையறுப்பதில் சில கடினங்கள் இருந்தாலும், யோசேப்பும் மரியாவும் ஏன் பெத்லகேமில் காணப்பட்டனர் என்பதை விளக்க இது பயன்படு கின்றது. அடுத்து லூக்கா இந்த கணக்கெடுப்பைக் கொண்டு நிறுவ விரும்பும் பிற உண்மைகள் யாவை எனக் காண்போம்.

அ. பிரமாண்டமான துவக்கம்: லூக் 3:1 இயேசு மற்றும் திருமுழுக்கு யோவானின் பணி வாழ்வை வரலாற்று ஆட்சியாளர்களோடு பொருத்தி பிரமாண்டமான தொடக்கத்தைத் தருவதுபோல, இங்கு இயேசுவின் பிறப்பை அகுஸ்து சீசரின் காலத்தில் பொருத்தி ஒரு பிரமாண்டமான தொடக்கத்தை அளிக்கின்றார்.

ஆ. அலிகார் நாசுஸ் எனும் இடத்தில் காணப்பட்ட கல்வெட்டு ஒன்று அகுஸ்து சீசரை 'உலகின் மீட்பர்' என்று குறிப்பிடுகின்றது. இதற்கு மாறாக இயேசுவே உண்மையான உலகின் மீட்பர் (காண். வச 10 –11). அவரே உலகிற்கு அமைதி கொணர்ந்தவர் (காண். வச. 14) என்பதை வலியுறுத்தவே இந்த வரலாற்று பேரரசரின் பெயரை லூக்கா இங்கு பயன்படுத்தியிருக்கலாம்.

இ. 2 சாமு 24–ல் தாவீது எடுத்த கணக்கெடுப்பு தண்டனையில் முடிந்தது. குரேனியு காலத்து

கணக்கெடுப்பின்போது கலிலேயாவின் யூதா என்பவர் கிளர்ச்சியைத் தூண்டினார். இந்த பின்னணியில், இதற்கு மாறாக அகுஸ்து சீசர் ஆணையிட்ட கணக்கெடுப்பின் போது பிறந்த இயேசு மகிழ்ச்சியையும் (வச. 10) இறை மாட்சியையும், உலகுக்கு அமைதியையும் (வச. 14) கொணர்ந்தார் என்பதையும் வலியுறுத்தவும் இது பயன்பட்டது.

**2. துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில். . .**

அன்னை மரியா. இயேசுவைப் பெற்று அவரைக் கிடத்திய இடத்தையும் விதத்தையும் (துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில்) லூக்கா மூன்று முறை குறிப்பிடுகின்றார் (வச. 7, 12, 16). எனவே இதற்கு சிறப்பான காரணம் ஏதேனும் இருக்க வேண்டும்.

**அ. தீவனத் தொட்டி**

எசா 1:3ல் இவ்வாறு வாசிக்கின்றோம்: "காளை தன் உடைமை யாளனை அறிந்து கொள்கின்றது; கழுதை தன் தலைவன் தனக்குத் தீனி போடும் இடத்தைத் (தீவனத் தொட்டி) தெரிந்து கொள்கின்றது; ஆனால் இஸ்ரயேலோ என்னை அறிந்து கொள்ள வில்லை; என் மக்களோ என்னைப் புரிந்து கொள்ளவில்லை" இயேசுவின் பிறப்பு நிகழ்வில் இடையர்கள் தீவனத் தொட்டியருகில் அனுப்பப்பட்டு, அங்கே மீட்பரைக் கண்டுக் கொண்டதன் வழியாக, லூக்கா, புதிய ஏற்பாட்டு கடவுளின் மக்கள் தங்களின் மீட்பரைக் கண்டு கொண்டார்கள் என்னும் செய்தியை வலியுறுத்த விரும்புவதாகவும் கொள்ளலாம்.

**ஆ. விடுதி**

எரே 14:8 இறைவனை நோக்கி இவ்வாறு கேட்கிறது: "நாட்டில் நீர் ஏன் அன்னியரைப் போல் இருக்க வேண்டும்? இரவு மட்டும் தங்க வரும் வழிப் போக்கரைப் போல் நீர் ஏன் இருக்க வேண்டும்?" எனவே இங்கு இஸ்ரயேலின் மீட்பர் அன்னியரைப் போல் விடுதியில் தங்காமல், வீட்டில், குடிலில் தமக்குரியவர் களோடு வந்து தங்கியிருக்கிறார் என்பதையும் குறிப்பதாக எடுத்துக்கொள்ளலாம். "அவர் தமக்குரியவர்களிடம் வந்தார்" (யோவா 1:11) என்று யோவான் இயேசுவைப் பற்றி குறிப்பிடுவதை இங்கு ஒப்பிட்டு நோக்கலாம்.

**இ. துணிகளில் பொதிந்து. . .**

பாரம்பரியமாக இதை கந்தைத் துணியென்றும், இயேசுவின் ஏழ்மையென்றும் விளக்கி வந்திருக்கின்றோம். அது அப்படித்தான் இருக்க வேண்டியதில்லை என்கிறார் விவிலிய அறிஞர் ரேய்மண்ட் புரவுன். சாலமோன் தனது பிறப்பைப் பற்றி இவ்வாறு குறிப்பிடுகின்றார்: "துணிகளில் பொதியப்பட்டேன்; பேணி வளர்க்கப்பட்டேன். எந்த மன்னரும் இதற்கு மாறுபட்ட வகையில் வாழ்க்கையைத் தொடங்கியதில்லை" (சாஞா 7:4–5). எனவே இஸ்ரயேலின் மீட்பர் கரிசனையுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டார் என்று லூக்கா கூறுவதாகவும் கொள்ளலாம். எனவே இயேசு ஒரு சாமான்ய தச்சன் மகனாய் உலகில் பிறந்தாலும் அவரின் பிறப்பில் பேசப்படும் பொருள்கள், இடம் ஆகியவை அவரின் உயர்வை, சிறப்பை குறித்துக் காட்டுவதாகக் கொள்ளலாம். எனவே, 'ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர்' (வச. 11), தாவீதின் நகரிலே (வச. 11 பெத்லகேம்), வழிப்போக்கரின் விடுதியில் அல்ல மாறாக வீட்டில் / குடிலில், உலகை உண்பிக்கும் உணவாக (தீவனத் தொட்டியில்), அரச குழந்தை போல துணிகளில் பொதியப்பட்டிருக்கின்றார் என்று லூக்கா விளக்க வருவதாகக் கொள்ளலாம்.

**II. பிறப்பைப் பற்றிய அறிவிப்பு (வச. 8-14)**

இனி, இயேசுவின் பிறப்பைப் பற்றிய அறிவிப்பில் உள்ள ஆழமான உண்மைகளை அறிய முயல்வோம்.

**1. இடையர்கள்**

இயேசுவின் பிறப்பு சாமான்யர்களுக்கு அளிக்கப்பட்டது என்னும் வெளிப்படையான பொருளோடு, விவிலிய பின்னணியில் இதற்கு இன்னொரு விளக்கமும் கொள்ளலாம். மீக்கா 4:2 மக்களினங்கள் எருசலேம் நோக்கி வரும்போது, "புறப்படுங்கள், ஆண்டவரின் மலைக்குச் செல்வோம்" என்று கூறி புறப்பட்டு வருவர் எனக் கூறுகின்றது. "இறுதி நாளில்" (மீக்கா 4:1) நடக்க இருப்பதாக கூறப்பட்டது இயேசுவின் பிறப்பில் நிறைவேறுவதாகவும் கொள்ளலாம். மேலே சொன்ன மீக்கா 4:2–க்கும் இடையர்கள், "வாருங்கள், நாம் பெத்லகேமுக்குப் போய் ஆண்டவர் நமக்கு அறிவித்திருக்கிற இந்த நிகழ்ச்சியைப் பார்ப்போம்" என்று கூறியதற்கும் (வச. 15) பல ஒற்றுமை உள்ளதைக் காண்க. ஆனால்

மீக்காவில் எருசலேமில் இருந்த மையம் இப்போது 'பெத்லகேமுக்கு' தாவீதின் நகருக்கு மாறியிருக்கின்றது. எனவே எல்லா மக்களும் மெசியா இயேசுவிடம் கூட்டிச் சேர்க்கப்பட்டனர் எனக் கூறுவதின் ஒரு பிரதிநிதி குழு இந்த இடையர்கள் என்று எண்ண வேண்டியுள்ளது.

**2. மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி (வச. 10.11)**

வானவர்களின் இந்த செய்தி, ''ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார்; ஓர் ஆண்மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார்; ஆட்சிப் பொறுப்பு அவர் தோள்மேல் இருக்கும்; அவர் திருப்பெயரோ வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள தந்தை, அமைதியின் அரசர்' என்று அழைக்கப்படும்'' (எசா 9:6) எனும் எசாயாவின் வார்த்தைகளோடு ஒத்துப் போவதைக் காணலாம். அங்கு மெசியாவின் பண்புகளாக கூறப்பட்டவற்றின் இடத்தில் லூக்கா 'ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர்' (வச. 11) எனும் வார்த்தைகளால் இட்டு நிரப்புகிறார். இவ்வாறு இயேசுதான் எசாயா வாக்களித்த மெசியா என்று இடையர்களுக்கு விளக்குகின்றார் வானவர்.

**3. வானவர் கீதம் (வச. 14)**

''உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!'' (வச. 140) என்று வானவர் பாடிய பாடல் பிற் காலத்தில் இயேசு எருசலேமிற்குள் வெற்றி வீரராய் நுழைந்த போது சீடர்கள் கூறிய, ''ஆண்டவர் பெயரால் அரசராய் வருகிறவர் போற்றப் பெறுக! விண்ணகத்தில் அமைதியும் மாட்சியும் உண்டாகுக'' (லூக் 19:38) என்னும் வார்த்தைகளுடன் ஒத்துப் போகின்றன. இயேசுவின் பிறப்பின் விளைவால் விண்ணிலும் மண்ணிலும் ஏற்பட இருக்கும் மாற்றத்தை வானவர்கள் அவரது பிறப்பிலேயே (வச. 14) கூறிவிட்டதை சீடர்கள் அவரது இறப்புக்கு சற்று முன்தான் கண்டுபிடிக்கின்றார்கள்.

**III. அறிவிப்புக்கு பதில் மொழி (வச. 15-20)**

இங்கு மூன்று வகையான பதில் மொழிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

**அ. இடையர்கள் (வச. 15.17)**

இவர்கள் புறப்பட்டுப் போய் மரியாவையும், யோசேப்பையும், குழந்தையையும் கண்டார்கள். அவர்களுக்கு அடையாளமாக கொடுக்கப்பட்டிருந்தவாறே (காண். வச 12) குழந்தையை தீவனத் தொட்டியில் கண்டனர். அதோடு அக்குழந்தையின் அருமை, பெருமைகளை, அவரின் பிறப்பின் உயரிய உண்மைகளை (காண். வச. 10 –11) மற்றவர்களுக்கும் அறிவித்தனர். இவ்வாறு நற்செய்தி அறிவிப்பாளர்கள் ஆனார்கள்.

**ஆ. கேட்டவர்கள் (வச. 18)**

இடையர்கள் கூறியதைக் கேட்டவர்கள் இந்த மொத்த அனுபவத்தை (இயேசு பிறப்பு பற்றிய அறிவிப்பு, இயேசுவைக் காணுதல்) பெறவில்லையாதலால் அவர்களின் பதில்மொழி வெறும் வியப்போடு நின்றுபோய்விடுகின்றது.

**இ. மரியா (வச. 19 மேலும் லூக் 2:51)**

தொடக்க முதல் (கபிரியேல் தூதர் மங்கள வார்த்தை சொன்னது முதல்) இதுவரை நிகழ்ந்த அனைத்து நிகழ்வுகளிலும் பங்கேற்ற, முக்கிய கதாபாத்திரமான மரியாவின் பதில்மொழி கேட்டவர்கள்போல வெறும் வியப்பாகவோ, இடையர்களைப் போல அறிவிப்பாகவோ இல்லாமல், 'தம் உள்ளத்தில் இருத்திச் சிந்திப்பதாக அமைந்தது' (வச. 19). எனவே இந்த நிகழ்வுகளுக்கு எல்லாம் ஆழ்ந்த பொருள் உண்டு; அவற்றின் பின்னே அர்த்தமுள்ள பல உண்மைகள் உண்டு. அவற்றை 'ஆழ்நிலை' தியானத்தின் வழி கண்டுகொள்ள முயற்சிக்கின்றார். இதனாலேயே அன்னை மரியா 'நம்பிக்கை யாளராகவும்' (விசுவசிப்பவராகவும்), இயேசுவின் 'தனி முதற் சீடராகவும்' விளங்குகின்றார்.

**முடிவுரை**

கிறிஸ்து பிறப்பு பெருவிழா, குறிப்பாக இறையிரக்க ஆண்டில் வரும் இந்த விழா ஆழமான பல மறையுண்மைகளைத் தன்னுள் கொண்டுள்ளது. நாம் இதை வெறும் ஆரவாரங்களோடும், வியப்புகளோடும், ஒருசில விவரிப்புகள், பேச்சுகளோடும் மட்டும் கொண்டாடி முடித்துவிடாமல், அன்னை மரியைப்போல நம் உள்ளத்தில் இருத்தி, சிந்தித்து, இயேசுவின் சீடராய் இறை இரக்கத்தின் தூதுவராய் ஆவோம்.

**அருள்பணி. A. ஜான் பாப்டிஸ்ட்**